6

# அந் நஜாஸத் - அசுத்தம்

ஒரு முஸ்லிம் இபாதத்களை நிறைவேற்றுவதற்குச் சுத்தமாக இருப்பதன் அவசியம் பற்றி முன்னைய பாடங்களில் பார்த்தோம். ஒரு முஸ்லிம் எப்போதும் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு அவன் நஜீஸ்களிலிருந்து (அசுத்தங்களிலிருந்து) தவிர்ந்து வாழ்வது அவசியமானது. அறபு மொழியில் 'அந் நஜாஸத்' என்ற சொல் 'அசுத்தம்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான அசுத்தங்கள், அவற்றின் வகைகள், அவற்றிலிருந்து சுத்தமாகும் முறைகள் பற்றியெல்லாம் இஸ்லாம் எமக்குத் தெளிவாகச் சொல்லித்தந்துள்ளது. இப்பாடத்தில் நஜீஸ்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

## நஜீஸின் வகைகள்

நஜீஸ்களை அவற்றைச் சுத்தம் செய்யும் முறைகளைக் கவனத்திற்கொண்டு மூன்றாகப் பிரித்து நோக்குவர்.

1. சாதாரண நஜீஸ்
2. இலகுவான நஜீஸ்
3. கடுமையான நஜீஸ்



## 1. சாதாரண நஜீஸில் அடங்குபவை

- மலம்
- சிறுநீர்
- இரத்தம்
- சீழ்
- வாந்தி
- மதி
- வதி
- மதுபானம்
- ஆழ்ந்த தூக்கத்தின்போது வாயிலிருந்து வடியும் வீணீர்
- சாப்பிட அனுமதிக்கப்படாத பிராணிகளின் பால்
- பிராணிகளின் இறந்த உடல்
- உயிருள்ள பிராணிகளிலிருந்து பிரிந்த பகுதிகள்

**விதிவிலக்குகள்**

- தானாகவே இறந்த மீன், வெட்டுக்கிளி (இவை சாப்பிட அனுமதிக்கப் பட்டுள்ளன)
- இரத்தம் சிந்தாத பிராணிகளான எறும்பு, தேனீ போன்றன.
- சாப்பிட அனுமதிக்கப்பட்ட இறந்த பிரணிகளின் எலும்பு, கொம்பு, நகம், உரோமம், சிறகு போன்றவை.
- மிகச் சிறிய அளவில் உடையில், உடம்பில் படும் இரத்தம்
- தாய்ப்பால்

### சுத்தம் செய்யும் முறை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நஜீஸ் உடலிலோ, ஆடையிலோ படிந்துவிட்டால் குறித்த நஜீஸை முதலில் அவ்விடத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். பின்னர் நஜீஸின் சுவை, நிறம், மணம் ஆகிய மூன்றும் நீங்கும் வரை கழுவ வேண்டும். நீரால் மாத்திரம் நஜீஸை நீக்க முடியாதபோது சவர்க்காரம், சலவைத்தூள் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். சுத்தம் செய்த பின்னரும் குறித்த நஜீஸின் நிறம், மணம் ஆகிய இரண்டுமோ அல்லது சுவை மட்டுமோ எஞ்சியிருந்தாலும் அது சுத்தமாகக் கருதப்படமாட்டாது.



## 2. இலகுவான நஜீஸில் அடங்குபவை

தாய்ப்பாலை மட்டும் உணவாகக் உட்கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்.

### சுத்தம் செய்யும் முறை

இத்தகைய நஜீஸை சுத்தம் செய்யும்போது குறித்த நஜீஸைப் பிழிந்து அகற்றிய பின்னர், அவ்விடத்தில் சுத்தமான நீரைப் போதியளவு தெளித்துவிடுவது போதுமானது.

## 3. கடுமையான நஜீஸில் அடங்குபவை

நாய், பன்றி என்பவற்றின் மலம், சலம், உமிழ்நீர், வியர்வை, இரத்தம் போன்ற அனைத்தும் இதில் அடங்கும்.

### சுத்தம் செய்யும் முறை

இந்நஜீஸை சுத்தம் செய்யும்போது முன்னர் கூறப்பட்ட முறைகளைக் கடைப்பிடிப்பதுடன் இவற்றுக்கு மேலதிகமாக மண் கரைசலை உபயோகித்தல், ஏழு தடவைகள் நீரூற்றிக் கழுவுதல் என்பவற்றையும் கைக்கொள்ள வேண்டும். முதல் தடவையிலோ அல்லது இடையிலோ மண் கரைசலை உபயோகிக்கலாம். கடுமையான நஜீஸ் படிந்துள்ள இடத்தில் நஜீஸின் மூவகைப் பண்புகளும் புலப்படாவிட்டாலும் கூட ஏழு தடவைகள் கழுவுதல் வேண்டும்.

பரந்த (கடல், குளம்) போன்ற நீர் நிலைகளில் சுத்தம் செய்யும்போதும், ஓடும் நீரில் சுத்தம் செய்யும்போதும் நீரைச் சிறிது கலக்கி அந்நீரில் அமிழ்த்திய பின் ஆறு தடவைகள் நீரினுள் அலசியெடுத்தல் போதுமானது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

### நஜீஸானவற்றைச் சுத்தம் செய்தல்

பொதுவாக நஜீஸானவற்றைச் சுத்தம் செய்ய முடியாது. ஆயினும் ஒருசில நஜிஸ்களைச் சுத்தம் செய்து பயன்படுத்த முடியும். அவ்வாறானவற்றுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

#### விலங்குகளின் தோல்

நாய், பன்றி தவிர்ந்த ஏனைய விலங்குகளின் தோல்களைப் பொறுத்த வரை அவற்றை நன்கு பதனிடுவதன் மூலம் உணவு தவிர்ந்த ஏனைய பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும்.

#### மதுபானம் (கள்)

இயற்கையாக எடுக்கப்படுகின்ற வேறு கலவைகள் சேர்க்கப்படாத கள், தானாகவே வினாக்கிரியாக மாறிவிட்டால் அதனை உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

#### நஜீஸ் விழுந்த உறைந்த பால்

பால் உறைந்து நெய், பட்டர், சீஸ் போன்ற கட்டியான நிலையில் இருந்து அதில் நஜீஸ் விழுந்தால் அந்நஜீஸ் படிந்த பகுதியை எடுத்துவிட்டு எஞ்சியதைப் பயன்படுத்த முடியும்.

### பயிற்சி

1. நஜீஸின் பிரதான வகைகளை உதாரணங்களோடு குறிப்பிடுக.
2. கடுமையான நஜீஸ் ஒருவரது ஆடையில் படிந்துவிட்டால் அதனை நீக்க என்ன செய்ய வேண்டும்?
3. உண்பதற்கு தடை செய்யப்பட்ட நாய், பன்றி தவிர்ந்த ஏனைய விலங்குகளின் தோல்களைச் சுத்தப்படுத்த யாது செய்ய வேண்டும்?
4. பின்வரும் விடயங்கள் குறித்த இஸ்லாமிய சட்டத்தீர்ப்புகளைக் கண்டறிந்து எழுதுக.

   அ. இறந்துபோன ஒரு மாட்டின் தோலைக் கொண்டு மேளம் தயாரித்தல்

   ஆ. நுளம்பை அடிப்பதன் மூலம் உடலில் இரத்தம் படுதல்

   இ. தயிர் மீது ஒரு நஜீஸ் விழுதல்

   ஈ. தானாக இறந்த, அழுகாத நிலையில் உள்ள ஒரு வெட்டுக்கிளியை சாப்பிடுதல்